பேரூராட்சி அலுவலகம்
திங்கள் நகர் தேர்வு நிலை பேரூராட்சி
திங்கள் நகர்.

ந. க. எண். 237 / 2010 / அ1

நாள். 09–06– 2010

## அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 2010 – 2011
## ஒப்புநோக்கு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு

1. கன்னியாகுமரி மாவட்டம் திங்கள் நகர் பேரூராட்சியில் 2010 – 2011ம் வருட அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் பணிகளை செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் தகுதியான ஒப்பந்தகாரர்களிடமிருந்து பகிரங்மாக பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தக்காரர்கள் மத்திய அல்லது மாநில அரசு அல்லது மத்திய அரசு மாநில அரசு சார்ந்த நிறுவனங்களிலிருந்து பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்களாக இருக்க வேண்டும். மேலும் ஒப்பந்தக்காரர்கள் குறைந்த பட்ச தகுதியுடைய வகுப்பு 3 மற்றும் 4ல் தெரிவிக்கப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு மட்டும் பணிகள் வழங்கப்படும். (15 லட்சம் முதல் 30 லட்சம் மதிப்பீடு வேலைகளுக்கு வகுப்பு 3 வது நிலையும், 15 லட்சம் வரையுள்ள வேலைகளுக்கு வகுப்பு 4வது நிலை ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ஒப்பந்தங்கள் பெறப்படும்)

2. திங்கள் நகர் பேரூராட்சியில் கீழ் கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு ஒப்பந்தக்காரர்கள் மூலம் ஒப்பந்தப்புள்ளிகளை இப்பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களால் வரவேற்கப்படுகின்றன.

3. பணிகளுக்குரிய ஒப்பந்தப் படிவங்களை 24–06–2010ம் தேதி மாலை 3.00 மணி வரை அலுவலக நேரத்தில் உரிய தொகையினை திங்கள் நகர் பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி அல்லது செயல் அலுவலர் திங்கள் நகர் பேரூராட்சி என்ற முகவரிக்கு வங்கி வரைவோலை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப் படிவங்களை பதிவு தபால் மூலமாகவே அல்லது விரைவு தபால் மூலமாகவோ பெற விரும்புவோர் உரிய தொகைக்கு மேல் கூடுதலாக ரூ. 200/– செலுத்த வேண்டும். தபால் வழி தாமதங்களுக்கு திங்கள் நகர் பேரூராட்சி செயல் அலுவலர் பொறுப்பேற்க இயலாது.

4. ஒவ்வொரு பணிகளுக்கும் அதன் எதிரே குறிப்பிட்டுள்ள டேவணித் தொகையை ரொக்கமாகவோ அல்லது வரைவோலையாகவோ செயல் அலுவலர் திங்கள் நகர் பேரூராட்சி என்ற முகவரிக்கு செலுத்தப்பட வேண்டும்.

5. ஒப்பந்தப்புள்ளிகளை திங்கள் நகர் பேரூராட்சி செயல் அலுவலராகவோ அல்லது அவரது அதிகாரம் பெற்றவராகவோ 25–06–2010ம் தேதி மாலை 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை திங்கள் நகர் பேரூராட்சி செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் வருகை தந்துள்ள ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் 25–06–2010ம் தேதி மாலை 3.30 மணிக்கு திறக்கப்படும் ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாள் விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டால் அதற்க்கு அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு அன்றைய தினம் திறக்கப்படும்.

6. இதர விவரங்களை ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் பார்த்து தெரிந்து கொள்ளலாம்.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (லட்சத்தில்) | டேவணித் தொகை (ரூ) | ஒப்பந்தப்புள்ளி படிவத்தின் விலை (ரூ) |
|---|---|---|---|---|
| 1 | வாடிவிளை பெருங்கோடு இணைப்பு சாலை மேம்பாடு செய்து கருந்தளம் அமைத்தல் | 12.00 | 24000.00 | 6240.00 |
| 2 | குழியூர் அடைவியார் குளம் மேம்பாடு செய்து தூர்வாருதல். | 5.00 | 10000.00 | 1560.00 |
| 3 | 15வது வார்டு மேலமாங்குழி பெருங்கோடு சாலை சிமெண்ட் தளம் அமைத்தல் | 6.00 | 12000.00 | 3120.00 |
| 4 | திங்கள் நகர் தினசரி சந்தையில் 15 கடைகள் கட்டுதல் | 20.00 | 40000.00 | 6240.00 |
| 5 | பன்னிக்கோடு சுடுக்காடு செல்லும் சாலை சிமெண்ட் தளம் அமைத்தல் | 5.00 | 10000.00 | 1560.00 |
| 6 | திங்கள் நகர் நேசமணி பார்க் பக்கம் 100000லிட்டர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டுதல். | 10.00 | 20000.00 | 6240.00 |
| | மொத்தம் | 58.00 | | |

## நிபந்தனைகள்

1. ஒவ்வொரு பணிக்கும் தனித்தனியாக ஒப்பந்தப்புள்ளிகள் கொடுக்க வேண்டும்.

2. ஒப்பந்தக்காரர்கள் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளும் போது ஒப்பந்தக்காரர்களின் நிதிநிலைமை பொருளாதார நிதி நிலைமை குறித்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

## சிறப்பு நிபந்தனைகள்

1. ஒப்பந்தப்புள்ளிகள் கொடுப்பதற்கு தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்கள் அவர்களின் பெயரில் கட்டாயமாக கடந்த ஐந்து ஆண்டுகளில் அரசு துறையில் ஒப்பந்த புள்ளிகளில் மதிப்பீட்டிற்கு இரண்டரை மடங்கு அளவிற்கு கூடுதலாக கட்டுமான பொறியியல் பணிகள் செய்திருக்கப்பட வேண்டும்.

2. மேற்கண்ட பணிகளுக்கு தேவைப்படும் அனைத்து பொருள்களையும் ஒப்பந்தக்காரர்கள் தங்களது சொந்த பொறுப்பில் தரமானதாக வாங்கி பயன்படுத்தல் வேண்டும். அவ்வாறு வாங்கப்படும் பொருட்கள் தரம் மற்றும் அளவு நிர்ணயிக்கப்பட்ட அளவுகோலுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும். தரத்தைக் குறித்த தேவையான சான்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

ஒப்பந்தக்காரர்கள் கடந்த 5 ஆண்டுகளில் செய்து முடித்த பணி விவரங்களை ஆண்டு வாரியாக தாக்கல் செய்வதோடு ஏற்கனவே பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி முடிக்கப்படாமல் உள்ள விவரங்களை தாக்கல் செய்யப்பட வேண்டும்.

4. அமைக்கப்படும் பணிகள் ஒப்பந்தக்காரர்கள் பணியினை முடிக்கும் நாளிலிருந்து ஒரு வருடம் முடியும் வரையில் ஏற்படும் அனைத்து பராமரிப்பு பணிகளையும் தன் சொந்த செலவிலேயே மேற்கொள்ளுதல் வேண்டும். கூடுதல் வைப்புத் தொகை மேற்படி மதிப்பீட்டில் 5% செலுத்தப்பட வேண்டும்.

5. இதர விவரங்களை ஒப்பந்தப்புள்ளி நமுனாவிலிருந்து தெரிந்து கொள்ளலாம் அல்லது அலுவலக நேரங்களில் பேரூராட்சி பொறியாளரின் ஆலோசனைகளைப் பெறலாம்.

6. ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்டு மன்ற ஒப்புதல் பெற்ற பின்னரே வேலை உத்தரவு ஆணை வழங்கப்படும்.

7. மேற்கண்ட பணிகள் நடைபெறும் போது சம்மந்தப்பட்ட உயர் அலுவலர்களால் ஆய்வு செய்யப்படும்.

8. பணிகள் நிர்ணயிக்கப்பட்டகால அளவிற்குள் முடிக்கப்பட வேண்டும் தவறும் பட்சம் அபராத தொகை விதிக்கப்படும்.

செயல் அலுவலர்
திங்கள் நகர் தேர்வு நிலை பேரூராட்சி.
கன்னியாகுமரி மாவட்டம்

9/6/10

பெறுநர்:
பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள் அனைவருக்கும்,
திங்கள் நகர் பேரூராட்சி.

நகல் :-
1. மாவட்ட ஆட்சித்தலைவர், கன்னியாகுமரி மாவட்டம் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. பேரூராட்சிகள் உதவி இயக்குநர் நாகர்கோவில் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
3. உதவி செயற் பொறியாளர், பேரூராட்சிகள் பிரிவு, பேரூராட்சிகள், நாகர்கோவில்
4. இளநிலைப் பொறியாளர், திங்கள்நகர் பேரூராட்சி
5. பேரூராட்சி செயல் அலுவலர்கள், குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பேரூராட்சிகள் (விளம்பரம் பலகையில் விளம்பரம் செய்ய)
6. அலுவலக விளம்பரப் பலகைக்கு.
7. சம்பந்தப்பட்ட கோப்புக்கு (6)
8. தலைவர் அவர்கள் மேஜைக்கு தகவலுக்காக.